# ஆராதனை ஆண்டவருக்கே

**(ஆபிராம்) தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்றார்கள்; அவர்களைக் கண்டவுடனே, அவன் கூடாரவாசலிலிருந்து அவர்களுக்கு எதிர்கொண்டு ஓடித் தரை மட்டும் குனிந்து: ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நீர் உமது அடியேனைவிட்டுக் கடந்துபோகவேண்டாம். (ஆதி 18:2,3)**

மம்ரேயின் சமபூமியில் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, மூன்று புருஷர்களை ஆபிராம் கண்டபோதிலும், அருகில் சென்றபோதோ அவர்களுள் ஒருவர் "ஆண்டவர்" என்பதை அறிந்துகொண்டதும், அவரையே தரைமட்டும் குனிந்து வணங்குகின்றான். தூதர்களுக்கும், ஆண்டவருக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்திருந்தவன் ஆபிராம். என் நேசர் வெண்மையும் சிவப்புமானவர்; பதினாயிரம்பேர்களில் சிறந்தவர் (உன் 5:10) என்று மணவாட்டி மணவாளனை அடையாளம் கண்டுகொள்வதைப்போல, **ஆண்டவரை அடையாளம் கண்டுகொள்வது அழைக்கப்பட்டவர்களுக்கு எளிதானது**. மேய்ப்பன் ஆடுகளை அறிந்திருக்கிறதோடு மாத்திரமல்ல, ஆடுகளின் அறிவிலும் மேய்ப்பன் இருப்பதையே ஆபிரகாமின் இந்த சந்திப்பு உறுதிப்படுத்துகின்றது (யோவான் 10:3,4,27). உபசரிப்பு மூன்று பேருக்கும் கிடைத்தாலும், உரையாடலோ ஆண்டவர் ஒருவரோடு கூட மாத்திமே நடக்கின்றது.

ஆண்டவருக்கான ஆராதனையை மனிதரிடமிருந்து பிடுங்கி தனக்கானதாக அதனை மாற்றிவிட சத்துரு பல்வேறு வழிகளில் முயற்சிக்கிறான். **பிசாசின் இத்தகைய குணத்தை நமக்கு வெளிப்படுத்தவே,** பிசாசினால் சோதிக்கப்படும்படி ஆவியானவரால் இயேசு கிறிஸ்து வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். சோதனையின்போது இயேசு கிறிஸ்துவைச் சந்தித்த பிசாசு, "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, **என்னைப் பணிந்துகொண்டால்,** இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்" என்று சொன்னான் (மத் 4:9). இதன் பொருள், பிதாவினிடமிருந்து இயேசு கிறிஸ்துவைப் பிரித்துவிடவேண்டும் என்ற

சாத்தியமில்லாததை தனது சிந்தையில் அவன் வைத்திருந்ததே. “பிதாவை விட்டுவிட்டு, பொருட்களை மட்டும் வைத்துக்கொண்டு” இன்றும் சாத்தானைப் பணிந்துகொள்ளும் மக்கள் அநேகர். அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, **அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக** என்று எழுதியிருக்கிறதே (1சாமு. 7:3,4) (மத் 4:10) என்று இயேசு கிறிஸ்துவைப்போல **பிதாவைப் பிடித்துக்கொள்பவர்களே பிள்ளைகள்**. இலவசங்களுக்காக இயேசு கிறிஸ்துவை அல்ல, எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன் (பிலி 3:7) என்ற எண்ணமுடையவர்களே போரிடும் சாத்தானோடு போராடி வெற்றிகொள்ள முடியும்.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் பிறந்தபோது, சாஸ்திரிகள் எருசலேமிலிருந்து ஏரோது ராஜாவின் அரண்மனைக்கு வந்தபோதும், “யூதருக்கு ராஜாவாகப் **பிறந்திருக்கிறவர் எங்கே**? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, **அவரைப் பணிந்துகொள்ள** வந்தோம்” என்றே கூறுகிறார்கள் (மத் 2:2); அவர்களை அனுப்பிவைத்த ஏரோதுவும்கூட, “நீங்கள் போய், பிள்ளையைக்குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள்; நீங்கள் அதைக் கண்டபின்பு, நானும் வந்து **அதைப் பணிந்துகொள்ளும்படி** எனக்கு அறிவியுங்கள்” என்று சொல்லி, அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பினான் (மத் 2:8). இயேசு கிறிஸ்து பிறந்திருந்த வீட்டிற்குள் சாஸ்திரிகள் பிரவேசித்தபோது, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, **சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு**, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள் (மத் 2:11).

கொர்நேலியுவின் வீட்டிற்குள்ளே பேதுரு பிரவேசிக்கிறபொழுது, கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டுபோய், அவன் பாதத்தில் விழுந்து, பணிந்துகொண்டான். பேதுரு அவனைத் தூக்கியெடுத்து: எழுந்திரும், **நானும் ஒரு மனுஷன்தான்** (அப் 10:26) என்று அதனைத் தடுத்தான். எலியா எத்தனை பெரிய தீர்க்கதரிசியாயிருந்தாலும், “நம்மைப்போலப் பாடுள்ள மனுஷன்தான்” (யாக். 5:17) என்று யாக்கோபு எழுகின்றாரே. **பொருட்களுக்காக சத்துருவை பணிந்துகொள்ளாமலும், உலக மதிப்பிற்காக மனுஷன் என்ற ஸ்தானத்தை மறந்துவிடாமலும் இருப்போம்**.